# தாய் அமுதம் தமிழ்

கி. உமாமகேஸ்வரி
டெக்னோசாப்ட் கம்ப்யூட்டர் பார்க், 42, பெண்ணை நகர் கோண்டூர் அஞ்சல்
கடலுனர் 607 002 தமிழ்நாடு, இந்தியா

---

தமிழுக்குத் தலைவணங்கும் இம்முயற்சி பாராட்டுக்குரியது.

உலகத் தமிழ் மக்களெல்லாம் பயனடையும் வண்ணம் தமிழ் இன்டர்நெட் அமைய வேண்டும். அமுதம், டி.எம், முரசுஅஞ்சல் என பல எழுத்துருக்கள் (fonts) இணையத்தளங்களில் விரவிக் கிடந்தாலும் நமக்குத் தேவை ஒரு விசேஷமான, எல்லோரும் பயன்படுத்தக்கூடிய தமிழ் மென்பொருள். ங் அல்லது ஞ், டி அல்லது டீ போன்ற எழுத்துருக்கள் கடினப்பொருள் பூட்டு (Hardware lock) இருக்கக்கூடிய கணிப்பொறிகளில் எளிதாகப் பயன்படுத்த முடிவதில்லை. இரண்டு அல்லது மூன்று அச்சுப் பயன்பாட்டிலோ அல்லது வெட்டி ஒட்டுவதன் மூலமோதான் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இரண்டாவதாக, ஆங்கிலத்தில் இருப்பதுபோல் விசேஷ அச்சுத் தட்டு (keyboard) தமிழுக்கு வடிக்கப்படுவதும் அவசியமானதொன்று. தமிழ் தட்டச்சு தெரியாதவர்கள் கூட இதன்/லம் பயன்பெறலாம். தட்டச்சுக் கருவியில் உள்ள அதே எழுத்துருக்கள் அந்தந்த இடத்தில் அமைப்பது நல்லது. முக்கியமாக, ஆங்கில அச்சுத் தட்டில் இருப்பதுபோன்ற தனிப்பட்ட எண் அட்டை இருப்பது தமிழில் தேவையில்லை. பதிலாக, தமிழுக்கென்றே இருக்கும் பிரத்தியேகமான எழுத்துக்கள் அவ்விடத்தில் அமைக்கப்படலாம். விரல்வீச்சு (fingering) மாறாமலிருக்க இது உதவும்.

நமது இலக்கியங்களிலுள்ள பொக்கிஷங்கள் கணிணிமயமாக்கல் மூலம் பாதுகாக்கப்பட வேண்டும். புத்தகங்களும், சி.டி.க்களும் அழியக்கூடியவை, அரிக்கப்படக்கூடியவை. இலங்கையில் அரிய தமிழ்ப் புத்தகங்கள் கலவரத்தில் சுவடுதெரியாமல் அழிந்துபோனதை நாம் மறந்துவிடக் கூடாது. சங்க இலக்கியங்களில் உள்ள வீரமும், காதலும், வாழ்க்கை முறையும் மட்டுமே நம் கலாச்சாரத்தின் பதிவுகளில் மிச்சமுள்ளவை. அவற்றைப் பாதுகாப்பதன் மூலம் நம் சந்ததியினருக்கு வாழும் முறையைக் கற்றுத் தருகிறோம். இலக்கியங்களை ஒவ்வொன்றாய் தமிழ் இன்டர்நெட் மூலம் கணிணி மயமாக்கல் வேண்டும். இதற்காக, தமிழும் இலக்கியமும் அறிந்தவர்களிடம் ஒப்பந்த முறையில் இந்தப் பணி ஒப்படைக்கப்படவேண்டும்.

உயர்ந்த பண்பாடும் மொழியும் மட்டுமே இதில் நுழையத் தகுதியாக இருக்கவேண்டும். திரைப்படமோ, மலிவான கதைகளோ கலக்காமல் முழுக்க முழுக்க தமிழின் வரலாற்றுப் பெருமை பேசும் தளமாக இது அமையவேண்டும்.